DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.81/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | லட்சுமி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | வேலாயுதம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2025

1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கிருஷ்ணராயபுரம் வட்டம் நடராஜபுரம் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் House Keeping வேலை செய்து வருகிறேன். 1 ம் எதிரி ஜயப்பன், 2 ம் எதிரி சஞ்சய், 3 ம் எதிரி ராஜதுரை, 4 ம் எதிரி அரவிந்த், 5 ம் எதிரி பாரதி, 6 ம் எதிரி பூலிங்கம், 7 ம் எதிரி பிரவீன் ஆகியோர்களை தெரியும். பக்கத்து தெருவில் தான் வசித்து வருகிறார்கள். 18.06.2021 காலை 11.00 மணிக்கு வீட்டில் இருந்த போது 1 முதல் 7 எதிரிகள் சிலேனில் இருந்து வந்த நாய்களா உங்களை கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் அகதிகள் என்று தேவடியா பசங்களா என்று திட்டினார்கள். குடிபோதையில் இருந்தார்கள். நாங்களும் திட்டினோம் . கத்தி, தடி, எடுத்து குத்த வந்தார்கள்.

2. ஜோதிலட்சுமி, ஷாலினி, மீனாட்சி ஆகியோர்களை தடியால் அடித்தார்கள். சண்டை போட்டு விட்டு போய்விட்டார்கள். அன்றைய தினமே இரவு 9 லிருந்து 10 மணியிருக்கும் சஞ்சய் என்பவர் கையில் பெட்ரோல் குண்டு, மற்ற எதிரிகள் சேர்ந்து சுந்திரலிங்கம் என்பவர் வீட்டின் மேல் வீசினார்கள் பெட்ரோல் குண்டு தீப்பிடித்து எரிந்தது தண்ணீர் ஊற்றி அணைத்தோம். நாங்கள் காவல் நிலையம் சென்றோம். புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். புகார் நான் கொடுத்ததுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பகுதிபிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த இரவு அன்று எதிரிகள் அனைவரும் எங்களை பார்த்து உங்கள் அனைவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று அரிவாளை காட்டி மிரட்டினார்கள் என்றால் ஆமாம். கரண்டையும் ஆப் செய்தார்கள். ஏன் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் பதட்டமாக இருந்தது அதனால் சொல்லவில்லை.

<u>1 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நாங்கள் நடராஜபுரம் காலனியில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் பக்கத்து தெருவில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டைத்தாண்டி தான் நாங்கள் எங்கள் வீட்டிற்கு செல்லவேண்டும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நடராஜபுரம் காலனியில் நடந்தது என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும்.

2. போலிசார் விசாரிக்கும் போது இயற்கையாக காற்றில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதை எதிரிகள் தான் மின்இணைப்பை துண்டித்து பெட்ரோல் குண்டு வீசி எங்கள் பகுதியிலும், மற்ற நபர்கள் வீட்டில் எரிந்தும், நீர் ஊற்றி அணைத்தாகவும், வழக்கு வழு சேர்க்கும் வகையில் எதிரிகள் மின்இணைப்பை துண்டித்துவிட்டு எங்களை அரிவாளளும், தடியாலும் அடித்தார்கள் என்று சொன்னோம் என்றால் சரிதான். எதிரிகளை பழி வாங்கும் நோக்கத்தோடு சம்பவத்தை மிகைப்படுத்தி புகார் கொடுத்துவிட்டு போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை என்ன சம்பவம் நடந்ததோ அதைத்தான் சொன்னேன்.

3. சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். யாருக்கும் சண்டையில் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடக்கும்போது வீட்டில் இருந்தேன் என்றும், பிரச்சனை பெரிசாகிவிடும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சந்தித்து எல்லோரும் புகார் கொடுத்தோம்

என்றால் சரிதான். என் தங்கையை மீனாட்சியை கத்தியால் குத்த வந்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

4. நான் முதல் விசாரைணையில் சொல்லியுள்ள 1 முதல் 7 எதிரிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் கட்டிட வேலைக்கு சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். ஐயப்பன் கட்டிட மேஸ்திரி என்றால் சரியல்ல. அவரிடம் நான் வேலை பாரத்தேன் என்றால் சரியல்ல. அவர் பெயிண்டிங் வேலைக்கு செல்வார். ஐயப்பனுக்கும், எனக்கும் சம்பள பாக்கி உள்ளது என்றால் சரியல்ல. அப்போது கொரோனா காலம் என்பதால் சம்பளம் கொடுக்கமுடியாத நிலையில் ஐயப்பனிடமிருந்து சம்பளம் வாங்குவதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதிரிகள் யாரும் எங்களை மிரட்டவும் இல்லை,. திட்டவும் இல்லை, அடிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலிஸ் விசாரிக்கும் போது உண்மையான சங்கதிகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.01 17:40:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.